**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-239/2019**

**List of Witness LW1 Examined as PW1 (Complainant)**

| | | | |
|---|---|---|---|
| Name | கருணாநிதி | Caste: | |
| Father's name | ரெங்கன் | Calling: | விவசாயம் |
| Village | பிசானத்தூர் | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 47 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.12.2023.

முதல் விசாரணை

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 26.12.2004 ஆம் தேதியன்று, காலையில் கல்லாக்கோட்டை சத்திரப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் என்னுடைய சகோதரி ராசாத்தி என்பவர் வீட்டிற்கு காலையில் சுமார் 7.30 மணிக்கு திரும்பி வரும் போது, சொத்து சம்மந்தமாக பிரச்சினை உள்ள வேலன் மகன் பிச்சைமுத்து என்பவர் 4 நபர்களோடு, உருட்டுக்கட்டையுடன் என்னை அடித்து தாக்க முயற்சி செய்தார். நான் தப்பி வந்து, கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் காலை 8.00 மணிக்கு புகார் கொடுத்தேன்.

2) அன்று மதியம் ஒரு 11.00 மணியளவில் தொலைபேசியில் சத்திரப்பட்டியில் இருந்து, பிச்சைமுத்து என்பவர், குருவாண்டான் தெருவில் இருந்து ஒரு 5 அடி ஆட்களை அழைத்து வந்து, என்னுடைய மைத்துனர் மதியழகன், சகோதரி ராசாத்தி, தயார் சிவப்பாயி, சகோதரியின் பிள்ளைகள் ரஞ்சனி, மனோஜ்குமார் ஆகியோரை அரிவாள், உருட்டுக்கட்டை , இரும்பு கம்பி போன்ற ஆயுதங்களால் அடித்து தாக்கிவிட்டு ஓடி விட்டார்கள். உயிர்க்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக தொலைபேசியில் சொன்னார்கள். உடனே நான் கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் சென்று பிச்சைமுத்து மற்றும் அடி ஆட்கள் தாக்கியதை சொல்லி உதவிக்கு கார் கேட்டேன். இரண்டு காவலர்களுடன் ஒரு ஆட்டோ எடுத்துக்கொண்டு அடி பட்டவர்களை கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன்.

3) அடிபட்டவர்கள் என்னுடைய மைத்துனர் மதியழகன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்ததால், தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அன்று இரவு சுமார் 9.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் பெருமாள், என்னை விசாரணைக்கு அழைத்து வரும்படி நான் காவல் நிலையம் சென்றேன். அப்போது காவல் உதவி ஆய்வாளர் பெருமாள் அவர்கள் சமாதானமாக போக சொல்லி மிரட்டினார்கள். நான் சமாதானமாக போக முடியாது என்று சொன்னதால், என்னடா புண்ட மவனே, நான் சொன்னதை கேட்க மாட்டியா என்று கன்னத்தில் ஓங்கி அறைந்தார். அப்போது பக்கத்தில் நின்ற தலைமைக்காவலர் ஆறுமுகசாமி என்பவரும் காலால் ஓங்கி உதைத்தார். பிறகு மறுநாள் காலையில் என் குடும்பத்தில் கலந்து கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன்.

4) பிறகு மறுநாள் காலையில் ஒரு மூன்று நபர்களை அழைத்து கொண்டு பதிவு செய்ய டேப்பை எடுத்துக்கொண்டு காவல் நிலையம் போனேன். அப்போது காவல் உதவி ஆய்வாளர் பெருமாள், என்னடா கேட்டு வந்தியா, சமாதானமாக போறிங்களா என்று கேட்டார். நான் நாங்கள் புகாருக்கு FIR போட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவரிடம் சொன்னேன். உடனே என்னடா கேனக்கூதி நான் சொல்றதை கேட்க மாட்டியா, சமாதானமாக போக மாட்டியா

என்றும் புண்டை மகனே நான் நினைச்சா, உன்னை கஞ்சா கேஸ் போட்ருவேன், இல்லைனா சாராய கேஸ் போட்ருவேன், இல்லைனா எதாவாது கொலை கேஸ் போட்டுவிடுவேன் என்று சொன்னார். நான் முடியாது என்று சொன்னதும் மீண்டும் ஆறுமுகசாமியும் எஸ்.ஐ. பெருமாளும் அடித்து தாக்க வந்தார்கள். நான் பேசிய விசயங்களை எல்லாம் ஆடியோ பதிவு செய்துள்ளேன். பிறகு எங்கள் மீதும் எங்கள் குடும்ப நபர்கள் மீதும் பொய் வழக்கு போட்டிருப்பதாக சொல்லி மிரட்டி வந்தார்கள். என்னுடைய அண்ணன் சூர்ய மூர்த்தி என்பவர் அரசு வேலை பார்ப்பதால் அவரை கைது செய்ய போவதாக சொல்லி மிரட்டினார்கள். அதன்பிறகு சமாதானமாக போக சொல்லி மிரட்டியதால் நாங்கள் கையெழுத்து போட்டோம்.

5) அதன் பிறகு 19.04.2005 ஆறுமுக சாமி என்பவரும் செல்வராசு தலைமைக்காவலரும் ரூ.3,000/- பணம் நான் சொல்லும் ஆளிடம் கொடுத்துவிடு, உங்கள் குடும்பத்தார் மீது போட்டிருக்கும் வழக்கை ரத்து செய்துவிட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம் என்று சுமார் 10.00 மணிக்கு கேட்டார்கள். நான் முடியாது என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். அதன் பிறகு தொடர்ந்து இன்று கைது செய் போகிறோம் நாளை கைது செய்ய போகிறோம் என்று தொடர்ந்து மிரட்டி வந்தார்கள். அதன் பிறகு நாங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் முன் ஜாமின் போட்டோம், எங்கள் மீது கேஸ் இல்லை என்று சொன்னார்கள்.

6) இது சம்மந்தமாக SP -யிடம் நேரடியாக சென்று 3 முறை புகார் கொடுத்துள்ளேன். DSP -யிடம் நேரடியாக சென்று ஒரு முறை புகார் கொடுத்துள்ளேன். பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், மனித உரிமைய ஆணையத்திற்கு அனுப்பினேன், எல்லா புகாருக்கும் நடவடிக்கை இல்லாததால், நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.